**11.7 பேரூராட்சிகள் நிர்வாகம் – அறிவிப்புகள் 2008-2009 ஆம் ஆண்டு அறிவிப்பு பேரூராட்சி மன்றத் தலைவர்கள் பயன்படுத்தும் செல்போனுக்கான கட்டணம்–மாதம் ஒன்றுக்கு ரூ. 500–க்கு மிகாமல் பேரூராட்சி பொது நிதியிலிருந்து வழங்க அனுமதி – ஆணை வெளியிடப்படுகிறது.**

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (பேரூ.2) துறை

அரசாணை (நிலை) எண். 143 நாள் : 31.07.2008

படிக்க :

பேரூராட்சிகளின் ஆணையர் அவர்களின் கடிதம் ந.க. எண். 11995/2008/இ3, நாள் 30.6.2008

**ஆணை :–**

16.4.2008 அன்று தமிழக சட்டமன்றப் பேரவையில், மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழுங்கல் குறை குறித்த மானியக் கோரிக்கை எண். 34–ஐ தாக்கல் செய்து உரையாற்றும் போது பல்வேறு அறிவிப்புகள் செய்துள்ளார். அந்த அறிவிப்புகளில் பின்வரும் அறிவிப்பு (வரிசை எண். 31)–ம் ஒன்றாகும்.

> ‘‘பேரூராட்சி மன்றத் தலைவர்களின் செயல்திறனை அதிகரிக்க அவர்கள் பயன்படுத்தும் செல்பேசிக்கான கட்டணத்தை மாதம் ஒன்றுக்கு ரூ. 500–க்கு மிகாமல் அந்தந்த பேரூராட்சிகளே செலுத்தும்’’

2. பேரூாட்சிகளின் ஆணையர் அவர்கள் தனது 30.6.08 நாளிட்ட கடிதத்தில், பேரூாட்சிகளுக்கு தேவையான அடிப்படை வசதிகள் மற்றும் திட்டப் பணிகள் செயல்படுத்துவதற்கு பிறதுறை அலுவலர்களுடன் தொடர்பு கொள்வதற்கும், குடிநீர் மற்றும் மின் விநியோகம் தொடர்பாக மின்வாரிய அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரிய அலுவலர்களுடன் தொடர்பு கொள்ளவும், பேரூராட்சி மன்றத் தலைவருக்கு செல்போன் சேவை அவசியமான ஒன்றாகும் என்று தெரிவித்துள்ளார். எனவே பேரூராட்சிப் பணிகளை உடனடியாக நிறைவேற்றும்பொருட்டு மேற்குறிப்பிட்ட அறிவிப்பின்படி, பேரூராட்சி மன்றத் தலைவர்களுக்கு அவர்கள் பயன்படுத்தும் செல்பேசிக்கான கட்டணத்தை மாத ஒன்றுக்கு ரூ. 500/–க்கு மிகாமல் அந்தந்த பேரூராட்சி பொது நிதியிலிருந்து வழங்க செயல் அலுவலர்களுக்கு அனுமதி அளித்து உரிய உத்திரவினை பிறக்கும்படி பேரூாட்சிகளின் ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்கண்ட பேரூராட்சிகளின் ஆணையரின் கருத்துருவினை கவனமுடன் பரிசீலனை செய்து, பேரூராட்சி பணிகளை உடனடியாக நிறைவேற்றும் பொருட்டு, பேரூாட்சி மன்றத் தலைவர்களுக்கு அவர்கள் பயன்படுத்தும் செல்போனுக்கான கட்டணத்தை மாதம் ஒன்றுக்கு ரூ. 500/–க்கு (ரூபாய் ஐநூறுக்கு) மிகாமல் அந்தந்த பேரூராட்சி பொது நிதியிலிருந்து வழங்க செயல் அலுவலர்களுக்கு அனுமதி அளித்து அரசு ஆணையிடுகிறது. இது குறித்து தக்க வழிகாட்டு நெறிமுறைகளை (Guidelines) வெளியிடுமாறு பேரூராட்சிகளின் ஆணையர் கேட்டுக் கொள்ளப்படுகிறார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

**கே. தீனபந்து**

தன்மைச் செயலாளர்